[1978 ஆகஸ்ட் 31

திரு. துரை முத்துசாமி: டான்சி நிறுவனம் லாபத்தில் நடைபெறுகிறதா? நஷ்டத்தில் நடைபெறுகிறதா? இந் நிறுவனம் மிகுந்த நஷ்டத்தில் நடைபெற்றுவருவதாகவும், இதி லுள்ள பொருட்களின் விலை மிக அதிகமாக இருப்பதாகவும் சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு கே. திரு. இராஜா முகமது: மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் தகுந்த விளக்கம் தரப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: நான் கேட்ட கேள்வி, தவணை முறையில் பொருட்களைக் கொடுப்பதற்கு உத்தரவிடப் படுமா என்பது. அதற்கான பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இதன் மூலக்கேள்வி அரசு நிறுவனங்கள் டான்சியிலிருந்து பொருட்கள் வாங்குவது பற்றி. தவணை முறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரலாம்.

திரு. ரா. க. சு. தண்டபாணி: தலைவர் அவர்களே, டான்சியில் தயாராகும் மரச் சாமான்கள் பற்றித்தான் இங்கு சொல்லப்பட்டது. இதைத் தவிர மற்ற சாமான்கள் ஏதாவது இருக்கின்றனவா? அதைப்பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: டான்சியில் 58 நிறுவனங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நிறுவனமும் பயிற்சிப் பணி மையமாகவும் பணி மையமாகவும் உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இது குறித்து விளக்கமான அறிக்கை தர வேண்டும் என்றால், அல்லது குறிப்பிட்ட இன்ன பொருளைப்பற்றி விவரம் வேண்டும் என்று தனிக் கேள்விப் போட் டால் அதற்கான பதிலைத் தருகிறேன்.

சென்னை அயன்புரம் பால்வள நிறுவனம்.

*வினா 18—திரு. ஆர். சண்முகம்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை, அயன்புரம் பால்வள நிறுவனத்தை அரசே ஏற்று நடத்த உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) அரசு நேரிடையாக ஏற்று நடத்த உத்தேசமில்லை. ஆனால் அரசுக்குச் சொந்தமான பால்வள நிறுவனம், அயனாவரம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டடங்

1978 ஆகஸ்ட் 31] [திரு. கே. இராஜா முகமது]

களையும் குளிர் பதன சாதனங்களையும் ஏற்றுக்கொண்டு அயனு வரம் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தின் சென்னையில் உள்ள வியாபார நடவடிக்கைகளை 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ந் தேதி முதல் மேற்கொண்டு வருகிறது. பால் சேகரிப்பு வேலையை அயன்புரம் பால்வள நிறுவனமே தொடர்ந்து செய்து வருகிறது.

(ஆ) சென்னை நகரவாசிகளுக்கு நல்ல பதப்படுத்திய பாலை முறையாக வழங்குவதை ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் செய்யாமல் ஒரே நிறுவனமே செய்வதுதான் பொருத்தமானது என்ற கருத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு நவீன வசதிகள் இருப்பதால் அதுவே இந்தத் தொழிலைச் செய்யப் பொருத்தமானது என்று கருதப்பட்டு இத் தொழில் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

திரு. ஆர். சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலுள்ள கூட்டுறவு சங்கங்களுடைய அனுமதி இல்லாமலேயே அரசாங்கம் எடுத்துக்கொள்கின்றது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, அயன்புரம் பால் வழங்கும் ஒன்றியத்தை இன்னும் குறுகிய காலத்தில் உற்பத்தியாளர் பால் ஒன்றியமாக மாற்று வதற்கான ஆணை பிறப்பிக்கப்பட இருக்கிறது. இதுவரை பால் வழங்கு சங்கங்களாக இருந்தவை எல்லாம் இனிமேல் உற்பத்தி யாளர் சங்கங்களாகமாற இருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட மாறுதல் ஏற்படுகின்ற நேரத்தில் அந்தந்தச் சங்கங்களினுடைய அனுமதியைப் பெற்று அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூலத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினு 19— திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொடைக்கானல் மலைப்பகுதியான பூலத்தூர் கிராமத் தில் ஊராட்சி ஒன்றிய Primary Health Centre இரண்டு ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டு திடீரென்று மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மறுபடியும் திறப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: (அ) பூலத்தூர் கிராமத்தில் இதுவரை ஆரம்பச் சுகாதார நிலையம் எதுவும் நிறுவப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS